2 பேதுரு

பொல்லாத மனுஷர்கள் எழும்பி, மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று ஏற்கெனவே பவுல் எபேசு மூப்பர்களையும், தீமோத்தேயுவையும், தீத்துவையும் எச்சரித்தார். (அப்போஸ்தலருடைய நடபடிகள் 20:29,30; 2 தீமோத்தேயு 4:3,4; தீத்து 1:10,11). இதர சபைத் தலைவர்கள் குறிப்பிட்ட வகையான மாறுபாடுகளைக் கண்டபொழுது எவ்விதம் செயல்பட்டார்கள் என்பதை நாம் 2 பேதுரு, யூதா, 1,2,3 யோவான் நிருபங்களில் காண்கிறோம்.

ஒருவேளை இரண்டாம் பேதுரு கிபி. 65-67 -இல் எழுதப்பட்டிருக்கலாம். பேதுருவின் முதலாம் நிருபத்தைப் பெற்றுக் கொண்ட அதே விசுவாசக் கூட்டத்தாருக்கு இந்த நிருபம் எழுதப்பட்டது என்பதை இதிலுள்ள விஷயங்கள் சுட்டிக்காட்டுகின்றன (2 பேதுரு 1:1; 3:1). இருப்பினும், அவர்களுடைய சூழ்நிலை மாறியிருந்தது. பேதுரு தனது முதலாம் நிருபத்தில், சபைக்கு வெளியிலிருந்து வரும் உபத்திரவங்களை நாம் எவ்வாறு சந்திக்க வேண்டும் என விசுவாசிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார் (1 பேதுரு 4:12). இந்த இரண்டாம் நிருபத்தில், சபைக்கு உள்ளே இருக்கும் கள்ளப் போதகர்களையும், பொல்லாதவர்களையும் எவ்வாறு சந்திக்க வேண்டும் என அவர் போதிக்கிறார் (2:1; 3:3,4).விசுவாசிகள் தங்களுடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஆலோசனைகள் அளிக்கிறார் (1:3-11). பின்பு, அவர்கள் அறிந்திருந்த கிறிஸ்துவின் சத்தியம் பெறப்பட்ட விதத்தை விவரிக்கிறார்:

1) கிறிஸ்துவின் மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாலும்,

2) பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட வேத வாக்கியங்களாலும் பெறப்பட்டது.

(1:12-21)

மேலும் அவர், கள்ளப் போதகர்களின் கெட்ட நடக்கையையும், அழிவை வருவிக்கும் உபதேசங்களையும் குறித்து அவர்களை எச்சரிக்கிறார் (2:1-22). கர்த்தருடைய நாள் வருவதை அவிசுவாசிப்பவர்களின் மனப் பாங்கைத் தீர்க்கதரிசனமாக உரைக்கிறார் (3:1-7). தேவபக்தியுள்ள ஜீவியம் செய்து அந்த நாளுக்காகத் தங்களைத் தாங்களே ஆயத்தப்படுத்தும்படி வாசகர்களுக்குப் புத்திகூறி நிருபத்தை அவர் முடிக்கிறார் (3:8-18). இதனால், கள்ளப் போதகர்களின் தந்திரங்களை அவர்கள் தவிர்த்துவிடக் கூடும்.

2 பேதுரு: உண்மையான கிறிஸ்தவனின் அறிவு

1. நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்குதல் (1:1-11).
2. கிறிஸ்துவின் அறிவின் உறைவிடம் (2:1-22).
3. கர்த்தருடைய நாள் (3:1-10).
4. கிறிஸ்தவனின் நடக்கை (3:11-18).

சபைக்கு உள்ளேயிருந்து அதை அழிக்க முற்படுகிறவர்களுக்கு இரண்டாம் பேதுரு எச்சரிப்பாக அமைந்துள்ளது. கள்ளப் போதகர்களின் மேல் நியாயத்தீர்ப்பின் நாள் நிச்சயமாக வரும் என்பதை இது பிரகடனப் படுத்துகிறது (3:12,13,17).

மேலும், நாம் கர்த்தரின் வருகைக்கு ஆயத்தமாயிருப்பதற்கும், "கறைபற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய், சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி" ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்ளுவதற்கும் இது நமக்கோர் முக்கியமான நினைப்பூட்டுதலாயிருக்கிறது (3:14).

கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் குண நலப் பண்புகளை உடையவர்களாயிருந்து அதை வெளிப்படுத்தல் (II பேதுரு 1:3-11)

முன்னுரை

அ. இந்த வேதபாகத்தில், கிறிஸ்தவ ஜீவியத்தை வாழ்ந்துகாட்டும் நம்முடைய திறமையின்மீது, பேதுரு தம்முடைய கவனத்தைக் குவிக்கிறார். நாம் முதன் முதலாவதாக விசுவாசித்தபோது, நமக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட, கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தின் நித்திய சுதந்திரத்தை, இது நிச்சயப்படுத்துகிறதென்று, அவர் நமக்குக் கூறுகிறார்.

ஆ. அவருடைய போதனைகள் கீழ்க்கண்ட கருத்துகளுக்கு மையமாக இருக்கிறது:

1. கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் குணநலப்பண்புகளைச் சொந்தமாக்கிக் கொள்ளவும், வெளிப்படுத்தவும், நமக்குத் திறன் கொடுக்கப்பட்டுள்ளது.

2. கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் பண்புகளைச் சொந்தமாக்கிக்கொள்ள.

3. கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் பண்புகளை வெளிப்படுத்த.

1. கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் பண்புகளைச் சொந்தமாக்கிக் கொள்ளவும், அதை வெளிப்படத் தெரியப்படுத்துவதற்கும் அவசியமான யாவும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. (1:3-4)

அ. வசனம் 3I. "ஜீவனுக்கும், தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளியிருக்கிறது". "திவ்விய வல்லமை" தேவனுடைய சக்தியும் வல்லமையும் இயேசு, குமாரனாகிய தேவனாயிருக்கிறார். பிதாவாகிய தேவனுக்கு அவர் சமமானவராயிருக்கிறார். இக்காரணத்தினால் நாம் தேவபக்தியுள்ள ஜீவியம் செய்ய உதவும் படியாகத் தெய்வீக வல்லமையை நமக்குக் கொடுக்க வல்லவராயிருக்கிறார்.

ஆ. வசனம் 3. "நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ...." "அறிவு" என்றால், அவரை, முழுவதும் முகம் அறிந்த நண்பராகப் பழக, இயேசு யார் என்பதை அறிந்து கொள்ளும் அறிவு என்று இங்கு பொருள்படும். "இயேசுவைக், கர்த்தரும், இரட்சகருமாக அறிந்து கொள்ள நடத்தப்படுகிறோம்", என்று இதை மற்றொரு முறையில் கூறலாம். இது நடக்கும்போது, ஒரு தேவ பக்தியுள்ள வாழ்க்கை வாழ, தெய்வீக வல்லமை நமக்குக் கொடுக்கப்படுகிறது. (நமக்குத் தேவையான எல்லாம்)

இ. வசனம் 3. "அவருடைய மகிமையினாலும் காருணியத்தினாலும்" சன்மார்க்கத்தில் மிக உன்னதமானவரும், தலைசிறந்த வாழ்க்கை வாழ்ந்தவருமான, இயேசு, மனுபுத்திரரை அழைத்து, அவர்கள் சன்மார்க்க ஜீவியத்தில் தலைசிறந்தவர்களாக வாழ பலன் தருகிறார். இதை அவர் செய்ய வேண்டிய அவசியம் இருக்கும் என்பதை ஏற்கெனவே அறிந்திருந்தார், ஏனெனில் மனிதன் தன் சொந்த பலத்தினால், தேவ பக்தியுள்ள வாழ்க்கை வாழக் கூடாதவனாயிருக்கிறான். அவன் மறுபடியும் பிறக்கவேண்டியதும், ஆவியிலே சீர்திருத்தப் படவும் அவசியம்.

கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் குண நலப் பண்புகளை உடையவர்களாயிருந்து அதை வெளிப்படுத்தல்
(II பேதுரு 1:3-11)

அவனுக்கு உதவிசெய்ய ஒருவர் அவசியமாயிருக்கிறது. அதனால்தான் இயேசு, பரிசுத்த ஆவியானவரை நமக்கு அனுப்பினார். *(யோவா 14:16-17; 15:26, 16:7,13)*

ஈ. வசனம் 4. "மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப் பட்டிருக்கிறது". "அவைகள்" என்பது கீழேயுள்ளவைகளைக் குறிப்பிடுகிறது:

1. கிறிஸ்துவைப்பற்றிய நம்முடைய அறிவு.

2. அவருடைய தெய்வீக வல்லமை இவைகளின் மூலமாகக் கிறிஸ்துவினுடைய இரண்டு பெரிய, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களுக்கு நாம் சுதந்திரவாளிகளாகிறோம்.

(அ) கிறிஸ்துவின் திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகிறோம்.

(ஆ) உலக ஆசைகளினால் ஏற்படும் உலகத்தின் சீர்கேடுகளுக்குத் தப்பித்துக் கொள்ளுவோம்.

உ. வசனம் 4. "அவைகளினால் திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகிறோம்". பேதுரு 3ஆவது வசனத்தைத் திரும்ப குறிப்பிடுகிறார். கிறிஸ்துவில் நம்முடைய விசுவாசமும், அவர் நமக்குக் கொடுக்கும் தெய்வீக வல்லமையும், அவருடைய தெய்வீக சுபாவத்தைப் பின்பற்றி வாழ நமக்கு உதவிசெய்கிறது. நாம் அவருடைய சன்மார்க்கப் பண்புகளை நினைத்துப் பார்க்கும்போது, இது ஒரு பயபக்தியான ஒரு கூற்று. அவர், பரிசுத்தர், நீதியுள்ளவர், நியாயமானவர், நல்லவர், அன்புள்ளவர், தாராளமனப்பான்மையுள்ளவர், இரக்கமுள்ளவர், உண்மையானவர். அவர் மாறமாட்டார்!

ஊ. பேதுரு அவருடைய முதலாம் நிருபத்தில், "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" என்று அவர் கூறும்போது, அவர் இப்பொருள்படவே கூறுகிறார்.

1. (1பேதுரு 1:15,16) கிறிஸ்து பரிசுத்தராக இருப்பதினால், நாமும் பரிசுத்தர்களாயிருக்க முடியும், ஏனெனில் சுவிசேஷ செய்தி நமக்குப் பிரசங்கிக்கப்பட்டபோது, நாம் அதை விசுவாசித்து, அவருடைய தெய்வீக வல்லமையைப் (வாக்குத்தத்தம்செய்யப்பட்ட பரிசுத்த ஆவி) பெற்றுக்கொண்டோம்.

எ. வசனம்4. "(இவைகளினாலே) நாம் இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பினோம்" கிறிஸ்துவில் இருக்கும் நம்முடைய விசுவாசத்தின் மூலமாகவும், அவருடைய தெய்வீக வல்லமையின் மூலமாகவும், பாவசுபாவத்தின் சக்தியிலிருந்தும், சாத்தானின் ஆளுகையிலிருந்தும், அதிகாரத்திலிருந்தும், நாம் தப்பியிருக்கிறோம். பவுல் அவருடைய மனந்திரும்பியதற்கு முந்தின நாட்களில் அவர் இருந்த நிலைமை ஆராய்ந்து பார்க்கும்போது கீழ்க்கண்டவாறு கூறுகிறார்; "என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்திற்கு நான் சிறைபாக்கப் பட்டிருக்கிறேன்.

கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் குண நலப் பண்புகளை உடையவர்களாயிருந்து அதை வெளிப்படுத்தல்
(II பேதுரு 1:3-11)

நிர்ப்பந்தமான மனுஷன் நான் இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலை யாக்குவார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்" (ரோமர் 7:23-25). பவுல், தொடர்ந்து நமக்கு இவ்வாறு கூறுகிறார்.

(தேவன், அவருடைய சொந்த குமாரனை, பாவ பலியாக அனுப்புவதின் மூலமாக). பாவ மனிதனுக்குள் இருந்த பாவத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்தார் (மனிதனுக்குள் இருந்த பாவத்திற்கு மரண தீர்ப்பளித்தார்) இதன்படி, நியாயப்பிரமாணத்திலுள்ள, நீதியுள்ள கட்டளைகள் யாவும், முற்றிலும் நம்மில் சந்திக்கப்படுகிறது. (பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் மூலமாக) (ரோமர் 8:3-4)

ஏ. இவையாவும் எப்படி நடைபெறுகிறது? அடுத்தடுத்துச் சங்கிலித்தொடர்போல் கீழ்க்கண்ட காரியங்கள் நடைபெறுகிறது:

(1) கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களால் சுவிசேஷ செய்தி பிரசங்கிக்கப்படுகிறது (ரோமர் 10:13-15).

(2) அந்தச் செய்தியை கேட்பவர்களுக்குப், பரிசுத்த ஆவியானவர், பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு ஆகியவைகளில் அவர்கள் தவறாக இருக்கிறார்கள் என்று நிரூபித்துக்காட்டுகிறார். (யோவான் 16:7-11).

(3) அந்தச் செய்தியை ஏற்றுக்கொண்ட மானிடர்களின் ஆவிகள், தேவனுடைய ஆவியினால், மறுபடியும் பிறக்கிறார்கள். (மறுபடியும் உருவாக்கப்படுகிறார்கள்) (யோவான்3:1-8). கிறிஸ்துவுடன் ஐக்கியத்திற்குள் பிரவேசிக்கிறவன், "ஒரு புதிய சிருஷ்டியாகிறான்" பழைய மனிதன் கடந்து சென்றுவிட்டான், புதிய மனிதன் தோன்றுகிறான். (2கொரிந்தியர்5:17; கலாத்தியர் 6:15).

(4) பரிசுத்த ஆவியானவர், விசுவாசிக்குள் வாசம் செய்ய வந்து, அவனுடைய ஆலோசகர், போதகர் மற்றும் வழிகாட்டியுமாயிருக்கிறார். (யோவா 14:16-17; ரோமர் 8:9; 1கொரிந்தியர் 12:13; யோவா 16:7,13-15)

(5) உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவர், விசுவாசியைக் கிறிஸ்துவின் சாயலாக மாற்ற தொடர்ந்து கிரியைசெய்து கொண்டேயிருக்கிறார். (2கொரிந்தியர் 3:18; ரோமர் 12:2)

2. கிறிஸ்துவினுடைய தெய்வீக சுபாவத்தை உடையவர்கள், வீணர்களாகவும், கனியற்றவர்களாகவும் இருக்கமாட்டார்கள்

அ. வசனம் 5. "இப்படியிருக்க", "இப்படி" என்றால் இங்கு, நாம் இந்த உலகத்தின் சீர்கேட்டிற்குத் தப்பியிருக்கிறோம். இப்பொழுது கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாயிருக்கிறோம்.

ஆ. வசனம் 5. இப்படியிருப்பதினால், நீங்கள், "அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய்" என்றால், அதிகக் கருத்தோடு, உண்மையுடன், ஆர்வத்துடன், அதிக அவசரமாக, அதைக் கவனத்துடன் செய்ய, என்று பொருள்படும். புதிதாக மனந்திரும்பியவன் இப்பொழுது அதில் ஈடுபாடுடையவனாக மாற வேண்டும்.

அவன் முயற்சியைச் செயல்படுத்தவேண்டும். அதிக விரைவாகவும் தீர்மானத்துடனும், கிறிஸ்துவின் கிருபையிலும்,

கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் குண நலப் பண்புகளை உடையவர்களாயிருந்து அதை வெளிப்படுத்தல்
(II பேதுரு 1:3-11)

அவரைப்பற்றி அறிகிற அறிவிலும் அவன் வளரும் முறையைத் துவங்குகிறான். (2பேதுரு 3:18, எபேசியர் 4:3) இது அவனுடைய அலுவல்களில் முதல் இடத்தைப் பெறுகிறது.

இ. வசனம் 5-7. "உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும் .... ஞானத்தையும் ... இச்சையடக்கத்தையும் .... பொறுமையையும் .... தேவ பக்தியையும் ..... சகோதர சிநேகிதத்தையும், ... அன்பையும் .....". விசுவாசி, (அதிக முயற்சியுடனும், விரைவாகவும், தீர்மானத்துடனும்) கீழ்க்கண்டவற்றை அவனுடைய விசுவாசத்துடன் சேர்த்துக் கொள்ளுகிறான். (இரட்சிப்புக்காக கிறிஸ்துவை சார்ந்திருக்கிறான்)

1. தைரியம் - மிகச் சிறந்த முறையில் விசுவாசத்தை செயல்முறையில் வெளிப்படுத்தல்.

2. ஞானம் - கிறிஸ்துவைப்பற்றியும், அப்போஸ்தலர்கள் மூலமாக எடுத்துக் கூறப்பட்ட அவருடைய போதனைகளையும் பற்றிய பூரண அறிவு.

3. இச்சையடக்கம் - ஒரு கட்டுப்பாடான வாழ்க்கை வாழுவது, சரீரபிரகாரமானவைகளில் மனதில் மற்றும் உணர்ச்சிகளில் உள்ள ஆசைகளை கட்டுப்பாட்டிற்குள் இருக்கச் செய்வது.

4. பொறுமை - பரீட்சைகளும், சோதனைகளும் வரும்போது, அசைக்கப்படாமல் இருத்தல்.

5. தேவபக்தி - தேவனிடம் உண்மையான பயபக்தியுடன் இருப்பது.

6. சகோதர சிநேகம் - மற்ற விசுவாசிகளிடம் கருணையுடனும், பாசத்துடனும் இருப்பது.

7. அன்பு - மற்றவர்களுடைய நன்மைக்காக, ஒருவர் தன்னையே தியாகமாகக் கொடுத்தல்.

ஈ. வசனம் 8. "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால் ..." கிறிஸ்துவில் நாம் வளரவேண்டும். இங்கு ஒரு முறை கிரியை செய்கிறது. பரிசுத்த ஆவியானவரின் மற்றும் கிறிஸ்து, அவருடைய சபைக்குக் கொடுத்த ஆவியினால் நிறைந்த தலைவர்களின் வழி நடத்துதல் மற்றும் அறிவுரைகளின்படி நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையை வாழும்போது; நாம் மேலும் அதிகமாக ஆவியில் முதிர்ச்சி அடைவோம். நாம், நிலைவரமாகவும், தீர்மானத்தில் உறுதியுள்ளவர்களாகவும், நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தில் பாதுகாப்பாகவும், இருக்கிறோம். (கலாத்தியர் 5:22-23; 1தீமோத்தேயு 6:11; ரோமர் 5:3-4)

உ. வசனம் 8. "இவைகள் .... உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது". "வீணர்" என்றால் "சோம்பேறியாய் கிரியை எதுவும் நடப்பிக்காத" நிலை என்று பொருள்படும். "கனியற்றவர்கள்" என்றால் "மலடாக, பலன் தராதவர்கள்" என்று பொருள்படும். கிறிஸ்துவினுடைய தெய்வீக சுபாவம் உண்டாயிருந்து தொடர்ந்து அதிகமதிகமாய் பெருகினால் அது (1) கிறிஸ்துவை பூரணமாக விளங்கிக்கொள்ளும் சக்தி (2) அவருடைய தெய்வீக சுபாவத்தில் பங்கெடுக்கும் சிலாக்கியம் ஆகியவைகள் நிச்சயமாக விசுவாசிக்குக் கிடைக்கும்.

கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் குண நலப் பண்புகளை உடையவர்களாயிருந்து அதை வெளிப்படுத்தல் (II பேதுரு 1:3-11)

ஊ. வசனம் 9. "இவைகள் இல்லாதவன் எவனோ......கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான்" கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தைப் பெற்று அதில் அதிகமதிகமாய் பெருகாமல் இருக்கும் ஒரு விசுவாசி, கீழ்க்கண்டவாறு காணப்படுகிறான்:

1. கிட்டப்பார்வையுள்ளவனாயிருக்கிறான். அவன் பார்வை குறுகிய எல்லைக்குட் பட்டதாயிருக்கிறது. ஆவிக்குரிய பகுத்தறிவும், உள்நோக்கும் இல்லாதவனாயிருக்கிறான்.

2. குருடனாயிருக்கிறான்--அவன் சாத்தானால்குருடாக்கப்பட்டவனாய், ஆவிக்குரிய காரியங்களைப் பார்க்கக் கூடாதவனாயிருக்கிறான்.

3. அவனுடைய பாவங்களிலிருந்து கழுவப்பட்டவன், என்பதை, அவன் மறந்து விட்டான். அவன் இரட்சிக்கப்பட்டவன் என்பதையும் மறந்துவிட்டான். "கிரியைகளில்லாத விசுவாசம் (நற்கிரியைகள்) தன்னில்தான் செத்ததாயிருக்கும், பலனற்றதாகவும் இருக்கும். (யாக்கோபு 2:17,20). அது, ஒருவனை இரட்சிக்கமுடியாது. ஒரு மனிதன், ஒன்று கிறிஸ்துவில் வளரவேண்டும் (அவருடைய தெய்வீக சுபாவத்தில்) அல்லது கிறிஸ்துவிலிருந்து விழுந்து விலகிச் சென்றிருக்கவேண்டும். (தேவனுடைய கோபத்திலிருந்து உன்னை இரட்சிக்க, அவரைச் சார்ந்திருக்க).

எ. இது என்ன ஒரு பயங்கரமான நிலை! இந்த மனிதன், "நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது; (2பேதுரு 2:22). என்பதுபோல்இந்த மனிதன் மாறுகிறான். இது, கிறிஸ்தவ விசுவாசத்தில் முதிர்ச்சியடையாதவர்களுக்கு இவ்வாறு நேரிடுகிறது. அவர்கள், ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்குள் வரவும், கிறிஸ்துவைப் பற்றிய அறிவு அவருடைய தெய்வீக சுபாவத்தின் பண்புகள் ஆகியவைகளைப்பற்றிக் கற்றுக் கொண்டு அதை கிரியையில் நடப்பிக்க உதவிசெய்யும் விசுவாசிகளின் ஐக்கியத்தில் சேர்ந்துகொள்ளவும் அதில் நிலைத்திருக்கவும் மறுக்கிறார்கள்.

3. கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் பண்புகளை யாவரும் அறிய வெளிப் படுத்துவது நம்முடைய இரட்சிப்பை நிச்சயப்படுத்துகிறது. (1:10-11)

அ. வசனம் 10. "சகோதரரே ஜாக்கிரதையாயிருங்கள்" பேதுரு கேட்டுக் கொள்ளும் அந்த வேண்டுகோளில் ஓர் அன்பின் தொனி இருக்கிறது. கிறிஸ்துவின் கட்டளையாகிய, "என்னுடைய ஆடுகளை மேய்ப்பாயாக....என் ஆட்டுக்குட்டிகளைக் கவனித்துக்கொள்ளுவாயாக" (யோவான் 21:15-16; 1பேதுரு5:3) என்ற கிறிஸ்துவின் கட்டளையை அவர் மறந்துவிடவில்லை.

ஆகவே, கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தை சொந்தமாக்கிக்கொள்ளவும், அதை யாவரும் அறியவெளிப்படுத்தவும் வேண்டியது மிக அவசரமான காரியம் என்பதைக் கூறி அவர்களைக் கேட்டுக்கொண்டு, அவர்களை அவர் உற்சாகப்படுத்துகிறார்.

ஆ. வசனம் 10. "உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்குங்கள். கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் பண்புகளை அதிகமதிகமான அளவுகளில் பெற்று,

கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின் குண நலப் பண்புகளை உடையவர்களாயிருந்து அதை வெளிப்படுத்தல்
(II பேதுரு 1:3-11)

அதை மற்றவர்களோடு உள்ள தொடர்புகளில் யாவரும் அறிய வெளிப்படுத்தினால், விசுவாசிகள் அவர்களுடைய இரட்சிப்பை
நிச்சயப்படுத்திக்கொள்ளுவார்கள் அவர்கள் உள்ளத்திலிருந்து ஜீவநீருற்றுகள் பாய்ந்து ஓடும். யோவான் 7:38).

இ. வசனம் 10. "இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை". "விழுவது" என்றால், தடுமாறுவது, தள்ளாடி விழுந்து விடுவது தேவனுடைய சன்மார்க்க நெறிகளிலிருந்து விலகிச் செல்வது, பாவம் செய்வது, உன்னுடைய இரட்சிப்பில் தவறிவிடுவது. கிறிஸ்துவினுடைய திவ்விய சுபாவத்தின் பண்புகளைத் தொடர்ந்து இடைவிடாமல் வெளிப்படுத்தும் விசுவாசிகள் கிருபையிலிருந்து ஒருபோதும் விழுந்து போகமாட்டார்கள்.

ஈ. வசனம் 11. "நித்திய இராஜ்யத்துக் குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்". விசுவாசிக்கிற யாவருக்கும் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நித்திய இராஜ்ஜியத்தில் அவர்கள் ஒரு இடத்தைப் பெற்றுக் கொள்ளுவார்கள். (யோவா 14:2-3; வெளிப்படுத்தின விசேஷம் 21:1-22:5) "அவர்கள், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்திற்குக் காத்திருந்தார்கள்". (எபிரெயர் 11:10) யாக்கோபு நமக்கு இவ்வாறு கூறுகிறார்:

"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கிய பின்பு, வாக்குத்தத்தம் பண்ணின, ஜீவகிரீடத்தைப் பெறுவான்" (யாக்கோபு 1:12)

முடிவுரை

அ. கிறிஸ்துவை நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாக நாம் அறிந்துகொள்ளும்போது, தேவ பக்தியுள்ள வாழ்க்கை வாழுவதற்கு வேண்டிய பெலனுடைய நாம் தெய்வீக வல்லமையைப் பெற்றுக் கொள்ளுகிறோம். நாம் கிறிஸ்துவினுடைய தெய்வீக சுபாவத்தை அதிகமதிகமாய் பெற்று, மற்றவர்களோடு தொடர்புகொள்ளும்போது அதை வெளிப்படுத்துவோமானால், நாம், நம்முடைய நித்திய சுதந்தரத்தை நிச்சயமாகப் பெற்றுக் கொள்வோம்.

சபைக்காகக் கிறிஸ்து வருவதைப்பற்றி அப்போஸ்தலனுடைய செய்தி

(II பேதுரு 1 :16-21)

முன்னுரை

அ. சபையிலுள்ள விசுவாசிகளைப்பற்றி பேதுரு கருத்துள்ளவராயிருக்கிறார். அவர், கிறிஸ்துவினுடைய உண்மையான அப்போஸ்தலன். அவரும், மற்ற அப்போஸ்தலர்களும் செய்த வேலைகளைக், கள்ளப்போதகர்கள் நுழைந்து, அழிப்பதைக் குறித்துக் கவலைப்படுகிறார். ஆகவே, அவர் கண்ணால் கண்ட சம்பவங்களையும், தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளையும் அறிவித்து, அவருடைய அப்போஸ்தல செய்தியை உறுதிப்படுத்துகிறார்.

ஆ. அவர் இன்னும் அதிககாலம் இருக்கப் போவதில்லை என்பதைப் பேதுரு அறிந்திருந்தார். ஆகவே, அவருடைய மரணத்தைக் குறித்து இயேசு அவரிடம் கூறியதை அவர் நமக்கு ஞாபகப்படுத்துகிறார். (யோவா 13:36; 21:18-19) எனவே, இந்த உபதேசங்கள், அப்போஸ்தலனுடைய இருதயத்திலிருந்து நேரடியாக வந்தது என்பதைப் பற்றி நாம் அறியவேண்டும்.

1. அப்போஸ்தலர்களுடைய செய்தி, அவர்கள் கண்களால் கண்ட சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது (1:16-18)

அ. "நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களல்ல". ஆதித்திருச்சபையின் நாட்களில் ஏராளமான கள்ளப்போதகர்கள் தந்திரமாகச் சபைகளுக்குள் நுழைந்து, கிறிஸ்து உயிர்த்தெழுந்ததையும், அவருடைய தெய்வத்தன்மையையும் மறுதலித்து, உண்மையான அப்போஸ்தலர்கள், மற்றும் போதகர்களின் சபை சாட்சிகளை அழிக்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் கீழ்க்கண்ட காரியங்களைச் செய்கிறார்கள்:

1. சுவிசேஷத்திற்கு எதிரான விரிவான கொள்கைகளை உருவாக்கி வளர்த்து, அவைகளே மிக உயர்ந்த ஞானம் என்று உரிமையோடு எடுத்துக் கூறுவார்கள்.

2. சபையில் பிரிவினைகளையும் சண்டையையும் உண்டாக்குவார்கள்.

3. பொருளாதார லாபத்திற்காக அவர்களைப் பின்பற்றுகிறவர்களை சுயநல நோக்குடன் உற்சாகப்படுத்துவார்கள் (2பேதுரு 2:2-3).

ஆ. சபைகள் மத்தியில் சுற்றறிக்கையை அனுப்பப்பட்ட பொய் போதகர்களால், விசுவாசிகள் அசைக்கப்படாமல் இருக்கும் படியாகப் பேதுரு, அவருடைய விளக்க உரையை அவர்கள் முன்பாக வைக்கிறார். ஆகவே, "நாங்கள் தந்திரமானக் கட்டுக்கதைகளைப் பின்பற்றுகிறவர்கள் அல்ல," என்று அவர் கூறும்போது, கீழ்க்கண்டவாறு பொருள்பட கூறுகிறார்:

"கிறிஸ்துவின் வல்லமையையும், அவருடைய சபைக்காக அவர் திரும்ப வருவதைப்பற்றியும் நாங்கள் உங்களுக்குக் கூறும்போது, உங்கள் மத்தியில் உள்ள, கள்ளப் போதகர்களைப் போல, நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றுகிறவர்கள் அல்ல."

இ. "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும், வருகையையும் பற்றி நாங்கள் உங்களுக்கு அறிவித்தபோது....". கிறிஸ்துவின் வல்லமை என்பது அவருடைய தெய்வீக வல்லமையைக் குறிக்கும். விசுவாசிகள்,

சபைக்காகக் கிறிஸ்து வருவதைப்பற்றி அப்போஸ்தலனுடைய செய்தி

(II பேதுரு 1 :16-21)

தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழவும், இந்த உலகத்திலுள்ள சீர்கேட்டிற்குத் தப்பவும், கிறிஸ்துவின் வல்லமை உதவி செய்கிறது (2பேதுரு 1:3-11)

அவருடைய சபையை எடுத்துக் கொள்ள அவர் திரும்ப வரும்போதும் கிறிஸ்துவின் வல்லமை வெளிப்படையாக எடுத்துக் காட்டப்படும் (1தெசலோனிக்கேயர் 4:13-18; 5:1-11; 2தெசலோனிக்கேயர் 2:1-12; 1கொரிந்தியர் 15:42-44, 53-54). இந்த வல்லமையே நம்முடைய கீழ்த்தரமான சரீரங்களை, அவருடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக இருக்கும்படியாக அவைகள் மாறும்படியாகச் செய்யும் (பிலிப்பியர் 3:21)

ஈ. வசனம் 16 "நாங்கள்....அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்கள்". அவருடைய "மகத்துவம்" என்பது, கிறிஸ்துவின் உன்னத மகிமைப் பிரகாசத்தைக் குறிப்பிடுகிறது. இது "மறுரூபமலையில்" தத்ரூபமாக அப்போஸ்தலர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது (மத்தேயு 17:1-8)

உ. வசனம் 17. "பிதாவாகிய தேவனால், அவர் கனத்தையும், மகிமையையும் பெற்றார்". "அவர்" என்பது இங்கே கிறிஸ்துவைக் குறிக்கிறது. அவர் மறுரூபமடைந்தபோது, மோசே, எலியா ஆகியவர்களுக்கு மேலாக பிதாவினால் கனப்படுத்தப்பட்டு, தேவனுடைய குமாரன் என்று அறிவிக்கப்பட்டார்.

அவர் மனுஷகுமாரனாக அவதரிக்கப்படுவதற்குமுன் அவருடைய தெய்வீகத் தன்மையும், அதற்குப் பின் உயிர்த்தெழுபோகும் மகிமையும் வெளிப்படுத்தப்பட்டது.

ஊ. வசனம் 17. "...என்று சொல்லுகிற சத்தம் உன்னத மகிமையிலிருந்து அவருக்கு உண்டாயிற்று". "சத்தம்" என்பது பரலோகத்திலிருக்கிற பிதாவாகிய தேவனுடைய சத்தமாயிருந்தது. மறுரூபமாக்கப்பட்டபோது, கிறிஸ்து எவ்வாறு மகிமையைப் பெற்றவராக அறிவிக்கப்பட்டாரோ அவ்வாறாகவே, மேகங்களுக்கு மேலாகச் சபையை திரும்ப எடுத்துக் கொள்ள வரும்போது மகிமையையும், கனத்தையும் பெற்றவராக வெளிப்படுத்தப் படுவார்! அவர் எவ்வாறு அப்போஸ்தலர்கள் முன்பாக மறுரூபமாக்கப்பட்டாரோ அவ்வாறாகவே, சபை மேகங்களுக்கு மேலாக மகிமையோடே எடுத்துக் கொள்ளப்படும்போது, விசுவாசிகளின் சரீரங்கள் மறுரூபமாக்கப்படும் (1கொரிந்தியர் 15:52-53; 1தெசலோனிக்கேயர் 4:16-17)

எ. போர்தான் நதியில், கிறிஸ்து தண்ணீரில் ஞானஸ்நானமும் அபிஷேகமும் பெற்றதைத் தொடர்ந்து உடனடியாகப் பிதாவின் சத்தமும், வார்த்தைகளும் எவ்வாறு இருந்ததோ, அவ்வாறாகவே கிறிஸ்து மறுரூபமாக்கப்பட்ட போதும் அவருடைய சத்தமும் வார்த்தைகளும் இருந்தது.

(மத்தேயு 3:16-17) பிதா, கிறிஸ்துவுக்குக் கொடுத்த கனத்திற்கும், மகிமைக்கும் உதாரணமாக, பேதுரு இந்த உதாரணத்தைப் பயன்படுத்தியிருக்கக் கூடும். ஆகிலும், அது கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஏற்பட்ட மகிமையான மாறுதலுக்கு ஒப்பாகாது. இது மகிமையோடே மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ளப்படும்போது, விசுவாசிகளின் சரீரங்களுக்கும் நடைபெறும்.

சபைக்காகக் கிறிஸ்து வருவதைப்பற்றி அப்போஸ்தலனுடைய செய்தி

(II பேதுரு 1 :16-21)

ஏ. வசனம் 18 "...நாங்கள்...அந்தச் சத்தத்தைக் கேட்டோம்". கிறிஸ்துவின் வல்லமையையும், சபைக்காக அவர் திரும்ப வரப் போவதையும் பற்றி அவர்களுக்கும் அவர் போதித்தவைகள் சத்தியமானது என்பதை நிரூபிக்க, கிறிஸ்து மறுரூபமாக்கப்பட்டபோது, அப்போஸ்தலர்கள் கூட இருந்ததை, பேதுரு மறுபடியும் குறிப்பிட்டுக் கூறுகிறார். தன்னைப் பின்பற்றுகிறவர்களை ஆதாயம் செய்ய அல்லது ஐசுவரியவான்களாகும்படிக்குக் கள்ளப் போதகர்கள் வழக்கமாகச் செய்து வருவதுபோல், அவருடைய வார்த்தைகள் கட்டுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவைகள் அல்ல.

2. அப்போஸ்தலர்களுடைய செய்தி தீர்க்கத் தரிசிகளால் உறுதியாக்கப் பட்டிருக்கிறது (1:19-21)

அ. வசனம் 19. "அதிக உறுதியான தீர்க்க தரிசன வசனமும் நமக்கு உண்டு". "கிறிஸ்துவின் வல்லமையையும், அவருடைய வருகையையும் பற்றிய செய்தியை, அவர் மறுரூபமாக்கப்பட்டபோது நாங்கள் கண்டவைகளில் அவருடைய வல்லமையையும், பிதாவினுடைய வார்த்தைகளையும் கூறுவதினால் உங்களை நம்பச் செய்யக் கூடாவிட்டாலும், தீர்க்கத் தரிசிகளின் வார்த்தைகளை நீங்கள் நிச்சயமாக நம்புவீர்கள்", என்று பேதுரு கூறுகிறார். இது, இயேசு அப்போஸ்தலர்களுடன் இருக்கிறபோது, அவர் தம்மைக் குறித்து பழைய ஏற்பாட்டு வேத வசனங்களில் எழுதப்பட்டவைகளை எடுத்துக் கூறியவைகளைக் குறிக்கிறது. பேதுரு, அவர் உபதேசிக்கும் வேளைகளில், அதே வேதவசனங்களைப் பயன்படுத்துகிறார்.

1. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில், *2:21,28,35* வசனங்களில், போவேல் *2:28-32;* சங்கீதம் *16:8-11; 110:1* வசனங்களிலிருந்து மேற்கோளாக எடுத்து எழுதுகிறார்.

2. அப்போஸ்தலர் *3:23,25* வசனங்களில், உபாகமம் *18:15,18,19;* ஆதியாகமம் *22:18; 26:4* வசனங்களிலிருந்து மேற்கோளாக எடுத்து எழுதுகிறார்.

3. அப்போஸ்தலர் 4:11 வசனத்தில், சங்கீதம் 118:22 வசனத்திலிருந்து மேற்கோளாக எடுத்து எழுதுகிறார்.

4. தானியேல் *7:13; 12:1-2;* ஏசாயா *26:19;* மல்கியா 3:1-2 வசனங்களையும் பார்க்க வேண்டும்.

ஆ. தீர்க்கத்தரிசிகளால் கூறப்பட்டவைகள் யாவையும் யூதர்கள் அப்படியே நம்புகின்றனர். ஆகவே அப்போஸ்தலர்களுடைய உபதேசங்கள், தீர்க்கத் தரிசிகளின் வார்த்தைகளுடன் ஒத்திருக்குமானால், கள்ளப் போதகர்களுடைய வார்த்தையை புறக்கணித்து விட்டு, இவைகளை ஏற்றுக் கொள்ளுவார்கள்.

இன்று சபைக்கு இந்த அடிப்படையான சத்தியமே அவசியமாயிருக்கிறது!

பிசாசுகள் மற்றும் மனிதர்களின் யோசனைகளிலிருந்து தோன்றின கட்டுக் கதைகள் மற்றும் சுவிசேஷத்திற்குப் புறம்பான பொய்க் கொள்கைகளுக்குப் பதிலாக, வேத வசனங்கள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் போதனைகளை மறுபடியும் முற்றிலுமாகச் சார்ந்திருக்க வேண்டும் என்பதே பெரிய தேவையாக இருக்கிறது.

சபைக்காகக் கிறிஸ்து வருவதைப்பற்றி அப்போஸ்தலனுடைய செய்தி
(II பேதுரு 1 :16-21)

இ. வசனம் 19. “...இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்”. கீழ்க்கண்ட பொருளே இதிலுள்ள கருத்து: “நீ ஒரு இருண்ட இடத்தில் நடந்து செல்லும்போது, நீ பார்க்கும் படியாகவும், அங்கு இடறி விழாமல் இருக்கும்படியாகவும், உனக்கு ஒரு விளக்கு அவசியம்”. இந்த இருண்ட உலகில் நாம் வாழ்க்கைப் பாதையில் நடக்கும் போது (கள்ளப் போதகர்களின் மத்தியில்) தீர்க்கத்தரிசிகளின் வார்த்தைகள், நாம் தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ உதவி செய்யும்படியாக, நம்முடைய பாதைக்கு வெளிச்சமாக இருந்து, நம்முடைய கவனத்தைக் கிறிஸ்துவின் வல்லமையில் எப்போதும் நிலைத்திருக்கச் செய்கிறது. மற்றும் சபைக்காக அவர் திரும்ப வருவதை நம்பிக்கையுடன் எதிர்நோக்கியிருக்கச் செய்கிறது.

ஈ. வசனம் 19 “பொழுது விடியுமளவும்” என்பது, “கர்த்தருடைய நாள்” எனப்படும். இது கர்த்தர் சபையை மகிமையோடு மேகங்களுக்கு மேலாக எடுத்துக் கொள்ள வரப்போவதை வேறு விதமாகக் கூறுவதாகும். அந்த நாள் வரும்வரை, கிறிஸ்துவின் வல்லமையைக் குறித்தும், அவருடைய வருகையைக் குறித்தும், தீர்க்கத்தரிசிகள் போதித்தவைகளைப் பற்றிக் கொள். “இரவு சென்று போயிற்று; பகல் சமீபமாயிற்று” என்ற பவுல் கூறுகிறார் (ரோமர் 13:12)

உ. வசனம் 19 “விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும்” “விடிவெள்ளி” என்பது, இயேசுவைக் குறிப்பிடும் சொற்றொடர். எண்ணாகமம் 24:17 வசனத்தில்,

“அவரைக் காண்பேன், இப்பொழுது அல்ல, அவரைத் தரிசிப்பேன், சமீபமாய் அல்ல. ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும்” என்று வாசிக்கிறோம். மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 22:16 வசனத்தில் இயேசு “நான் தாவீதின் வேரும், சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன்”, என்று கூறுகிறார். கிறிஸ்து ஆகாயத்தில் தோன்றி, நம்முடைய அழிவுள்ள சரீரங்களை, அவருடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மாற்றும் வரைக்கும், நாம் தீர்க்கத்தரிசிகளுடைய போதனைகளை (அப்போஸ்தலர்களால் உறுதியாக்கப்பட்டவைகள்) உறுதியாய் பற்றிக் கொள்வோம் (1யோவான் 3:2)

ஊ. வசனம் 20-21 “ வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கத் தரிசனமும், சுய தோற்றமான பொருளையுடையதாயிராது..” “தோற்றம்” என்பது வந்த வழி என்பதைக் குறிக்கும். எனவே, பேதுரு, “எந்தத் தீர்க்கத்தரிசன வசனமும் தீர்க்கத்தரிசியினால் தோன்றினது இல்லை, என்று கூறுகிறார்.

1. தீர்க்கதரிசனம் தேவனிடமிருந்து தோன்றுகிறது. எல்லா தீர்க்கத்தரிசனத்திற்கும் அவரே அதிகாரியாயிருக்கிறார்.

2. தீர்க்கத்தரிசிகள், பரிசுத்த ஆவியானவர் அவர்களிடம் கூறினதை (எழுதும்படி) அவர்கள் பேசினார்கள் (எழுதினார்கள்) அவர்கள் காற்றினால் எடுத்துச் செல்லும்படி பாய்மரக்கப்பல்களைப்போல் இருந்தார்கள். (1தீமோத்தேயு 3:16) இக்காரணங்களினால், தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளை, நம்மத்தியில் இருக்கும் கள்ளப்போதகர்களின் வார்த்தைகளுக்குமேலாக, நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

சபைக்காகக் கிறிஸ்து வருவதைப்பற்றி அப்போஸ்தலனுடைய செய்தி

(II பேதுரு 1 :16-21)

முடிவுரை

அ. ஆதி அப்போஸ்தலர்களின் செய்தி கள்ளப்போதகர்களைப்போல் அல்லாமல், கீழ்க்கண்டவாறு உள்ளது:

1. கண்ணால் நேரில் கண்ட சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது.

2. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கத்தரிசிகளால் உறுதியாக்கப்பட்டது. ஆகவே, அவர்களுடைய சாட்சியை நாம் ஏற்றுக்கொண்டு, யாராவது ஒரு போதகர் அல்லது தீர்க்கத்தரிசி வேறுபட்ட ஒரு சுவிசேஷசெய்தியை அறிவித்தால் அதைப்புறம்பே தள்ளிவிடவேண்டும்.

கள்ளப்போதகர்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்பும் (II பேதுரு 2:1-22)

முன்னுரை

அ. பேதுரு, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் கருத்துக்களை இன்னமும் தம்முடைய மனதில் வைத்திருந்து, அவருடைய உபதேசத்தை ஆரம்பம் செய்கிறார். (1:20). ஆகையால் அவர் இந்த வார்த்தையினால் துவங்குகிறார். "கள்ளத் தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள் (பழைய காலத்தில்) அப்படியே, உங்களுக்குள்ளும், கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்". தேவனுடைய மக்கள் மத்தியில், கள்ளத்தீர்க்கத்தரிசிகளும், போதகர்களும், எப்போதும் இருந்துவந்தனர், இனிமேலும் இருப்பார்கள்.

ஆ. இந்தக் கள்ளப் போதகர்கள், தாங்கள் மிக உயர்தரமான போதகர்கள் என்று உரிமையுடன் கூறிக் கொள்வதோடு, உன்னத ஞானத்தைப் பெற்றவர்களென்றும் அதிகாரத்துடன் அறிவிப்பார்கள். ஆகிலும், அவர்கள் கீழ்க்கண்ட அவர்களுடைய குணங்களிலிருந்து அவர்கள் யார் என்பதை அறியலாம்.

1. புகழ் மற்றும் பணத்தை ஆதாயம் செய்ய அவர்களுக்கு இருக்கும் ஆவல்.

2. துன்மார்க்க நடத்தை.

3. கிறிஸ்துவிலிருந்தும், அவருடைய வழிகளிலிருந்தும் விலகிச் செல்லும்படியாக மக்களை வழிநடத்துதல், அவர் பக்கமாக வழி நடத்துவதற்கு பதிலாக, விசுவாசிகளின் ஐக்கியத்தை விட்டு தூரமாகச் செல்ல, வேதத்திலுள்ள சன்மார்க்க நெறிகளின் அளவுகளிலிருந்து விழும்படி செய்வார்கள்.

4. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின், தெய்வத் தன்மையை மறுதலிக்கும்படிச் செய்வார்கள்.

1. கள்ளப் போதகர்கள் இருப்பதின் நிச்சயம் (2:1-3)

அ. வசனம் 1. "கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள் இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்". பழைய ஏற்பாட்டிலுள்ள கள்ளத் தீர்க்கதரிசிகளை இது குறிக்கிறது. (ஏசாயா 9:13-17; எரேமியா 14:4) இஸ்ரவேலர்கள் மத்தியில் கள்ளத்தீர்க்கத்தரிசிகள் இருந்தது. போலவே, புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் மத்தியிலும் பொய்ப்போதகர்கள் இருப்பார்கள். (அப்போஸ்தலர் 20:29-30, கொலோசெயர் 2:8, 16-23; 1தீமோத்தேயு 4:1-2; 2தீமோத்தேயு 3:1-9; யூதா 4) தூர இடங்களில் உள்ள சபைகளில் ஊழியம் செய்ய அவர் அனுப்பும் ஒவ்வொருவரையும், பவுல் இதைக் குறித்து எச்சரித்தார்!

ஆ. வசனம் 1. "அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலிப்பார்கள்". பழைய ஏற்பாட்டு கள்ளத் தீர்க்கதரிசிகள் கீழ்க்கண்டவாறு இருப்பார்கள்.

1. உண்மையை கூறுவதைவிட புகழைப் பெற்றுக்கொள்வதில் அதிக ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள். (எரேமியா 6:14)

2. சுய லாபத்திற்காக ஆவலுடன் கிரியை நடபிப்பார்கள்.

3. துன்மாக்கமான ஜீவியம் செய்வார்கள். (எரேமியா 23:14,32)

கள்ளப்போதகர்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்பும் (II பேதுரு 2:1-22)

4. தேவன் பக்கமாக மனிதர்களைத் திருப்புவதற்குப் பதிலாக, அவரைவிட்டு விலகிச் செல்லுமாறும், நிலைவரமான விசுவாசிகளின் குழுக்களிலிருந்தும், வேதாகமத்தின் சன்மார்க்க நெறிகளின் அளவுகளிலிருந்தும் விலகிச் செல்லுமாறு வழி நடத்துவார்கள். (உபாகமம் 13:1-5) புதிய ஏற்பாட்டுக் கால சபைகளில் இருந்த கள்ளப்போதகர்களின் ஊழியங்களிலும், இதே நோக்கங்களும், அவர்கள் நம்முடைய சபைகளுக்குள் தந்திரமாக நுழையும்போது, இதே விதமான நடத்தைக் கோலங்களை வெளிப்படுத்தினதையும் நாம் எதிர்பார்க்கலாம்! காலாகாலங்களாகச் சாத்தான் அவனுடைய முறைகளில் உறுதியாக இருக்கிறான்!

இ. "...அழிவுக்கு ஏதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணி". கிறிஸ்துவின் மூலமாக வெளிப் படுத்தப்பட்ட தேவனுடைய சத்தியங்களை உபதேசிப்பதற்குப்பதிலாக, ஒருவன் விசுவாசிக்க விரும்புகிறவைகளை, புதிய ஏற்பாட்டு சபைகளுக்கு அறிமுகப்படுத்தினார்கள். "அழிவுக்கு ஏதுவான" என்றால், கிறிஸ்துவின் வல்லமையையும், அவரைப் பற்றிய அறிவையும் மறுதலிப்பதினால், விசுவாசிகள், விசுவாசத்தை விட்டு விலகிச் செல்லுமாறு வழி நடத்துவது, என்று பொருள்படும். கிறிஸ்துவின் வல்லமை மற்றும் ஞானம் என்பது:

1. இந்த உலகத்தின் சீர்கேட்டிலிருந்து நம்மை விடுதலை செய்கிறது.

2. கிறிஸ்துவின் தெய்வீக சுபாவத்தின்படி வாழும் வாழ்க்கை நடத்த உதவிசெய்கிறது. (2பேதுரு 1:3-4)

சிலர், அவருடைய சொந்த இரத்தத்தை, அவர்களுடைய பாவத்திற்குரிய தண்டனைக்குக் கிரயமாகத் தந்தவராகிய கிறிஸ்துவை முழுவதும் மறுதலிக்கும் அளவிற்கு சென்றுவிடுகிறார்கள்! இவர்கள், தங்களைப் பின்பற்றுகிறவர்களும் அவ்வாறே செய்யும்படியாக அவர்களுக்குப் போதிக்கிறார்கள்!

ஈ. வசனம் 2. "அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்" கள்ளப்போதகர்கள் தொற்று நோய் போல இருக்கிறார்கள். அவர்கள், போதிப்பவைகள் விசுவாசிகள் மத்தியில் விரைவாகப் பரவுகிறது. அவர்கள், வார்த்தையிலும், விசுவாசத்திலும் நிலைவரப்படாத பலவீனமான கிறிஸ்தவர்களை ஒன்று சேர்த்து தங்களைப் பின்பற்றுகிறவர்களாக்குகிறார்கள். இது கிறிஸ்துவுக்கும் சபைக்கும் துர்க்கீர்த்தியை உண்டாக்குகிறது.

உ. வசனம் 3. "... அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது". "அழிவு அவர்களைப் பார்க்கிறது, அது, இவர்களுக்காகக் காத்திருக்கிறது. அது உறங்குவதில்லை" என்று இது உண்மையில் பொருள்படும். கள்ளப்போதகர்கள், பழைய ஏற்பாட்டுக் கள்ளத் தீர்க்கதரிசிகளைப் போலவே, அவர்களுடைய மதியீனத்திற்குப் பயங்கரமான கிரயத்தைச் செலுத்துவார்கள். கிறிஸ்துவின் சத்தியத்திற்குப் புறம்பாக மற்றவர்களைத் தொடர்ந்து வழிநடத்திச் செல்வர்கள், அவர்கள் கீழ்க்கண்ட இடத்திற்குச் செல்லும்போது தேவனுடைய நியாயத்தீர்ப்பை அனுபவிப்பார்கள்.

1. மரித்து பாதாளத்திற்குள் செல்லும்போது, (லூக்கா 16:22-26) 2. உயிர்ப்பிக்கப்பட்டு, தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வெள்ளை சிம்மாசனத்திற்கு முன் கொண்டு வரப்படும்போதும்,

கள்ளப்போதகர்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்பும் (II பேதுரு 2:1-22)

அக்கினிக்கடலில் தள்ளப்படும்போதும் (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15) அவர்களைப் பின்பற்றினவர்களும் அதே கதியை அடைவார்கள் என்பது தான்.

எனக்கு வேதனையைத் தருகிறது. மனந்திரும்பிய கபடற்றவர்கள் தந்திரமாக ஏமாற்றப்பட்டு அழிவுக்கு வழி நடத்தப் படுகிறார்கள்!

ஊ. கள்ளப்போதகர்களால், விசுவாசிகள் சிறைபிடிக்கப்படாதபடிக்கு, இந்த வசனங்களை எழுதும்படியாகப் பரிசுத்த ஆவியானவர், பேதுருவை ஏவியுள்ளார். தேவனுடைய மக்களின் உண்மையான மேய்ப்பர்கள், (போதகர்கள்) கிறிஸ்து, அவர்களுடைய பராமரிப்புக்குக் கீழ் வைத்தவர்களில் ஒருவரும் வழிவிலகிப் போகாதபடிக்கு, கவனமாகக் கண்டிக்கவும், திருத்தவும், நீதியின் வழிகளில் பயிற்சியளிக்கவும், பரிசுத்த ஆவியானவரால் நம்பிக்கையுடன் அழைக்கப்படுகிறார்கள். இக்காரணத்தினால், விசுவாசிகள் அவர்களுக்கு செவி கொடுப்பார்களேயாகில், நன்மை அடைவார்கள்.

2. கள்ளப் போதகர்களின் நியாயத் தீர்ப்பு (2:4-9)

அ. வசனம் 4-8. "பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல்". கள்ளப்போதகர்களுக்கு நிச்சயமாக நியாயத்தீர்ப்பு உண்டு என்பதை, பேதுரு மூன்று எடுத்துக்காட்டுகளை பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்து பயன்படுத்துகிறார்:

1. பாவம் செய்த தூதர்களைத் தேவன், நரகத்திலே தள்ளி,
2. (துக்ககரமான இருண்ட பாதாளம்) நியாயத்தீர்ப்புக்காகக் கட்டி வைத்திருக்கிறார்.

2. பூர்வ உலகத்தில், நோவாவின் காலத்தில் இருந்தவர்கள் பாவம் செய்து, அவருக்கு விரோதமாகக் கலகம் செய்தபோது, தேவன் அவர்களைத் தப்பவிடவில்லை.

3. அவர்களுடைய அருவெறுப்பான துன்மார்க்க நடத்தைகளுக்காக, சோதோம், கொமோரா பட்டணங்களை அவர் எரித்துப்போட்டார். தேவன் இந்த மக்களைத் தப்பவிடாமல் இருக்கும்போது, மனந்திரும்பாத கள்ளப்போதகர்களையும் தப்பவிடமாட்டார்!

ஆ. கள்ளப்போதகர்களின் பாவங்கள், பேதுரு தேர்ந்தெடுத்த இந்த மூன்று எடுத்துக்காட்டுகளில் கூறப்பட்டவைகளுக்கு ஒத்ததாக இருந்ததினால் அவர் ஒருசமயம் இவைகளைப் பயன்படுத்தியிருக்கலாம்.

1. பெருமையும் எதிர்த்து கலகம் செய்தலும். (பாவம் செய்த தூதர்கள்)

2. சத்தியத்தை விட்டு விலகிச் செல்தல் (நோவா காலத்தில் வாழ்ந்த மக்கள்)

3. ஓரினச் சேர்க்கை மற்றும் வேறு பல பாலின தாறுமாறான நடத்தைகள் (சோதோமின் ஜனங்கள்)

இ. வசனம் 9. "அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைத்திருக்கிறார்". இது உண்மையில் கீழ்க்கண்டவாறு பொருள்படும். "நியாயத்தீர்ப்பு நாள் வரும்வரை அக்கிரமக்காரர்களை (கள்ளப்போதகர்களை) தண்டனை அடையும்படியாக எப்படி வைக்க வேண்டும் என்று தேவன் அறிந்திருக்கிறார்". தேவனுடைய கோபாக்கினையின் பயங்கரமான நாளிலிருந்து அவர்கள் தப்பிச் செல்ல முடியாது.

கள்ளப்போதகர்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்பும் (II பேதுரு 2:1-22)

ஈ. வசனம் 9. "கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை சோதனையினின்று எப்படி இரட்சிக்க வேண்டுமென்று அறிந்திருக்கிறார்". (அக்கிரமக்காரர்களுக்கு நேர்மாறாக) கர்த்தர் தம்முடைய மக்களை எவ்வாறு தப்புவிக்கலாம் (பாதுகாப்பது, பரிட்சைகள் மற்றும் சோதனைகளிலிருந்து விலக்கிக் காப்பது, பாய்ந்து வரும் நீரோட்டத்தைத் தம் பக்கமாக இழுத்துக் கொள்வது போல) என்று அறிந்திருந்தார். விசுவாசிகளை உற்சாகப்படுத்தும்படியாக, கள்ளப்போதகர்களுக்கு வரும் நியாயத்தீர்ப்பு மற்றும் தண்டனை ஆகியவைகளைக் குறித்த அவருடைய விவாதத்தை, இந்தச் சந்தர்ப்பத்தில் பேதுரு பயன்படுத்துகிறார். பவுல் அப்போஸ்தலனைப்போல, அவர் அவர்களை மறுபடியும் உறுதிப்படுத்துகிறார்.

1. சாத்தான், (கள்ளப்போதகர்கள் மூலமாக) அவர்களுக்குக் கொண்டுவரும் பரிட்சைகளையும் சோதனைகளையும் தாங்கி நிலைநிற்க கர்த்தர் அவருடைய மக்களைப் பலப்படுத்துகிறார்.

2. சாத்தானுடைய (கள்ளப்போதகர்கள் மூலமாக 1கொரிந்தியர் 10:13). பரிட்சைகளையும் சோதனைகளையும், கர்த்தர் ஒழுங்குபடுத்துகிறார். (அனுமதித்து, அதற்கு ஒரு முடிவைக் கொண்டு வருகிறார்).

உ. ஆகவே, நீ கள்ளப்போதகர்களுக்கு விலகி இருந்து, உண்மையுள்ளவர்களோடு நிலைத்திருந்தால், கிறிஸ்துவிலிருந்து விழுந்து போவதைக் குறித்துப் பயப்படவேண்டிய அவசியமில்லை. நோவாவை, உலகம் முழுவதும் அழிந்து போவதிலிருந்து, எவ்வாறு காப்பாற்றினாரோ, அவ்வாறே, அவர் உன்னைப் பாதுகாப்பார். அருவெறுப்பான தேவபயமற்ற மனிதர்களின் அழிவிலிருந்து லோத்தை எவ்வாறு இரட்சித்தாரோ அவ்வாறாகவே உங்களையும் இந்த அருவெறுப்பான, தேவபயமற்ற சந்ததிகளிடமிருந்தும், அக்காலத்தில் இருந்ததுபோல் நம் மத்தியிலும் இருக்கும் கள்ளப்போதகர்களிடமிருந்தும் நம்மையும் காப்பாற்றுவார்.

1. ஊ. துன்மார்க்க மக்களுடைய நியாயத்தீர்ப்பு, ஏன் மிகத் தாமதமாக வருவதைக் குறித்து விவரிக்கவேண்டுமென்று சில வேளைகளில், நாம் தேவனிடம் கேட்கிறோம். பரிட்சைகளையும் அநேகவிதமான சோதனைகளையும், நாம் ஏன் சந்திக்கவேண்டிய அவசியம் நேரிடுகிறது என்பதைக் குறித்தும் நாம் கேள்விகேட்கிறோம். அல்லது, நாம் மிகவும் சோர்ந்துபோகிறோம் மற்றும் ஆபிரகாமைப்போல, "துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ?" (ஆதியாகமம்18:23) என்று நாம் கேட்கிறோம்". "அப்படிப்பட்ட காரியத்தைச் செய்வது தேவனுக்கு தூரமாயிருப்பதாக," என்று கூறியபோது (வசனம் 5,7, ஆதியாகமம் 18:25). தேவன் ஆபிரகாமுக்குத் திரும்ப உறுதியளித்ததுபோல, உண்மையான விசுவாசிகளை, பேதுரு மறுபடியும் உறுதிப்படுத்துகிறார். அநீதிமான்கள் (விசேஷமாகக் கள்ளப்போதகர்கள்) நியாயத் தீர்ப்புக்காக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

நீதிமான்கள், பரிட்சைகளிலிருந்தும், சோதனைகளிலிருந்தும் தப்புவிக்கப்படுகிறார்கள். (தினந்தோறும்).

கள்ளப்போதகர்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்பும் (II பேதுரு 2:1-22)

3. கள்ளப்போதகர்களின் நடத்தை (2:10-22)

அ. வசனம்10-22 "இவர்கள்" வசனம் 10இல், உள்ள "இவர்கள்" கள்ளப் போதகர்களைக் குறிக்கும். பேதுரு, இப்பொழுது அவர்களுடைய நடத்தையை விவரிக்கத் துவங்குகிறார்.

1. வசனம் 10. "அசுத்த இச்சைபோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து". அவர்களில் அநேகர் ஒரே பாலினத்தைச் சேர்ந்த ஆண்கள் அல்லது பெண்களோடு பாலினத் தொடர்புகொள்ள, பற்றி எரியும் ஆசைபோடுள்ள ஓரினச்சேர்க்கைக்காரர்களாக அவர்களில் அநேகர் இருந்தனர். இப்படிப்பட்ட மனிதனுக்கு அவனுடைய பாலினஇச்சைகளைத் திருப்தி செய்து கொள்வதைத் தவிர, மற்ற எந்தக் காரியமும் அவனுக்கு ஒரு பொருட்டல்ல. அவனுக்கு எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லை.

2. வசனம் 10. "மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள்" (தைரியமும் மனமேட்டிமையுமுள்ளவர்கள்). இது, நல்லதூதர்களுடைய அதிகாரத்தை அசட்டை செய்வதைக் குறிக்கும். இது ஒரு ஆச்சரியமான காரியம் அல்ல. கள்ளப்போதகர்கள் கெட்ட தூதர்களால் (பிசாசுகளால்) வழிநடத்தப் படுகிறார்கள் இவைகள் ஆதியில் தேவனுக்கு விரோதமாகக் கலகஞ்செய்து அவருக்கு உண்மையுடன் நிலைத்திருந்த நல்ல தூதர்களை விட்டு தாமாகவே பிரிந்துசென்றவைகள்! (யூதா 7-8) இந்த மனிதன், ஆவிக்குரிய இராஜ்ஜியத்தைக் குறித்தும், பரலோக அதிகாரத்தைப்பற்றியும் முற்றிலும் அறியாதவன்.

எனவே, சபையிலுள்ள ஆவிக்குரிய அதிகாரத்தையும் அவ்வாறே அவன் அறியமாட்டான்.

3. வசனம் 12. "தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷித்து..." (அறிவில்லாத மிருகங்களைபோல). ---இவர்கள் விசுவாசிகள் மத்தியில்உலாவி, மாம்ச உணர்வுகளுக்கும், இச்சைகளுக்கும் ஏற்றாற்போல மட்டும் கிரியை நடப்பிக்கத் தெரிந்த அறிவில்லாத மிருகங்களைப்போல,அவர்களுடைய அன்பின் விருந்துகளில் பங்கெடுக்கிறார்கள். கிறிஸ்துவினுடைய வல்லமையும், அவரைப்பற்றிய அறிவும் விசுவாசிக்கு தேவபக்திபுள்ள வாழ்க்கை வாழ உதவிசெய்து,

இந்த உலகத்தின் சீர்கேட்டிலிருந்து அவர்கள் தப்பித்துக்கொள்ள உதவிசெய்கிறது என்று போதிக்கிறவர்களைப் பற்றி, அவர்கள் துன்மார்க்கமாக தூஷணம் பேசுகிறார்கள். அவர்கள் காட்டு மிராண்டித்தனமான மிருகங்களைப்போல் வாழ்க்கை நடத்துவதால், காட்டு மிராண்டித்தனமான மிருகங்களைப்போல பிடிக்கப்பட்டு அழிக்கப்படுவார்கள்.

4. வசனம் 14. "விபச்சாரமயக்கத்தால் நிறைந்தவைகளான கண்கள்" ஓரினச் சேர்க்கைக்காரர்களாக இல்லாதவர்கள், ஒவ்வொரு பெண்ணிலும், விபச்சாரிக்குரிய அம்சம் இருக்கக்கூடுமா என்று பாக்கிறவர்களாக இருக்கின்றனர்.

விசுவாசத்தில் உறுதியாக நிலை நாட்டப்படாத பெண்களை விபச்சாரத்தில் ஈடுபட வைக்கும் வழிகளைக் கண்டுபிடிப்பதில் தங்கள் கவனத்தை ஒருமுகப்படுத்துகிறார்கள் மீன்பிடிப்பவர்கள் தூண்டில்போட்டு மீன்களைக் கவர்ந்து பிடிப்பதுபோல, இவர்கள், விசுவாசிகளின் மத்தியில் இப்படிப்பட்டவர்களுக்காக வசீகரிக்கும் முறைகளைக் கையாளுகிறார்கள்.

கள்ளப்போதகர்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்பும் (II பேதுரு 2:1-22)

5. வசனம் 14-15. "பொருளாசைகளில் பழகினவர்கள்" (பிலேயாமின் வழிகளைப் பின்பற்றுகிறவர்கள்)--சிலர் விசுவாசிகளிடமிருந்து பணம்பெற்றுக் கொள்வதில் மிக நீண்டகால பயிற்சிபெற்று, அந்தத் தொழிலில் கைத்தேர்ந்த அதிகாரிகளாகி விடுகிறார்கள். பிலேயாம், பாலாக் அவனுக்குக் கொடுத்தப் பொன்னின்மீது எவ்வாறு ஆசையுள்ளவனாக இருந்தானோ, அவ்வாறாகவே, கள்ளப்போதகர்களும், விசுவாசிகளிடமிருந்து, பண ஆதாயம் பெற்றுக் கொள்வதில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். (எண்ணாகமம் 22:22-24).

6. வசனம் 18. "வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்திலிருந்து, அரிதாய் தப்பினவர்களைத் தந்திரமாய் பிடிக்கிறார்கள்..." இவர்கள் புதிதாக இரட்சிக்கப்பட்டவர்களிடம், அவர்கள் கிறிஸ்துவில் பெற்ற புதிய சுதந்திரம், அவர்கள், பாலின துன்மார்க்கசெய்கைகளில் ஈடுபட விடுதலைகொடுக்கிறதென்றும், எனவே விசுவாசிகளின் ஐக்கியத்தைவிட்டு விலகி வாழலாம் என்பதுபோன்ற வசீகரிக்கும் ஆலோசனைகளைக் கொடுக்கிறார்கள்.

ஆ. அவர்களுடைய வாழ்க்கை மற்றும் அவர்களைப் பின்பற்றுகிறவர்களின் வாழ்க்கையில் வெளிப்படும் கனிகளிலிருந்து அவர்களை நாம் அடையாளம் கண்டு கொள்ளலாம் என்று இயேசு கூறுகிறார். (மத்தேயு 7:15-20) ஆட்டுத்தோலைப்போர்த்த ஓநாய்கள்போல அவர்கள் இருக்கிறார்கள். முதலில் நல்லவர்களாகக் காணப்படுகிறார்கள், ஆனால் நெருங்கியிருந்து ஆராய்ந்துபார்க்கும் போது, வித்தியாசமான ஒரு நபராக வெளிப்படுத்துகிறார்கள்.

இவர்கள், தலையை மணலில் புதைத்துவைத்து, வாலை ஆகாயத்தில் வைத்திருக்கும் தீக்கோழிபோல் இருக்கிறார்கள்!.

இ. வசனம் 20-22. "உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள், மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு...." கள்ளப் போதகர்கள், கிறிஸ்துவைக் கர்த்தரும் இரட்சகருமாக ஒரு காலத்தில் அறிந்திருந்தும், மறுபடியும் பாவங்களில் சிக்கிக்கொண்டார்கள். இவர்கள், "செம்மையான வழியை விட்டுத் (கிறிஸ்தவர்களின் பாதை) தப்பி நடந்து; விலகி அலைகின்றனர். (வசனம்15) இவர்கள் கீழ்க்கண்டவாறு காணப்படுகிறார்கள்:

1. நாய் தான் கக்கினதைத் தின்னத் திரும்பியதுபோல.

2. கழுவப்பட்ட பன்றி; சேற்றிலே புரள திரும்பினதுபோல. (மத்தேயு 12:43-45; மற்றும் மத்தேயு 13:18-22; யாக்கோபு 1:14-15; கலாத்தியர் 5:4; எபிரெயர் 10:26-27; 32-39)

ஈ. இந்த உபதேசத்தில் பேதுரு நம்மில் ஒவ்வொருவருக்கும், ஒரு எச்சரிக்கையை வைத்திருக்கிறார்.

நாம் சாத்தானால் ஏமாற்றப்படுவதற்கு அல்லது, கள்ளப்போதகர்களின் தந்திரத்தால், கிறிஸ்துவில் உள்ள நம்முடைய சுதந்திரம் கீழ்க்கண்டவைகளைச்செய்ய நமக்கு அனுமதிக்கிறது என்று நினைக்கச் செய்யாதபடிக்கு நாம் கவனமாக இருக்கவேண்டும்.

1. இந்த உலகத்தின் சீர்கேட்டில் விழ.

2. ஆவிக்குரிய கட்டுப்பாட்டிற்கு வெளியே இருக்க,

3. விசுவாசிகளின் ஐக்கியத்திற்கு வெளியேயிருப்பது.

கள்ளப்போதகர்களும் தேவனுடைய நியாயத்தீர்ப்பும்
(II பேதுரு 2:1-22)

4. நாம் விரும்புகிறபடி செய்வது.

வேதம் நமக்கு வேறுவிதமாகப் போதிக்கிறது. (1பேதுரு 2:16; கலாத்தியர் 15:13).

முடிவுரை

அ. ஆதி சபையில் கள்ளப்போதகர்கள் இருந்ததுபோலவே, இன்றைய சபைகளிலும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். ஆகிலும், தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர், தேவபயமற்றவர்களையும், நீதிமான்களையும் ஒன்றுபோல நடத்தமாட்டார். மனந்திரும்பாத கள்ளப்போதகர்களை அவர் நியாயந்தீர்ப்பார். ஆனால் அவருக்கு உண்மையுடன் நிலைத்திருப்பவர்களைப் பாதுகாப்பார், அவர்களைத் தப்புவிப்பார்!

ஆ. கள்ளப்போதகர்களின் நடத்தைக் கோலங்களின், அட்டவணை ஒன்றைப்பேதுரு நமக்குக் கொடுத்திருக்கிறார். கீழ்க்கண்டவர்களைப் பகுத்தறிந்து இனம்காண, நாம் அவைகளை ஞாபகப்படுத்திக்கொண்டால் நல்லது:

1. சபையில் தலைமைப் பதவியில் இருப்பவர்கள்.

2. தலைமைப்பதவியில் இருக்க வாஞ்சிக்கிறவர்கள்.

3. தொலைக்காட்சி, ஒலிநாடா, ரேடியோ, புத்தகங்கள், பத்திரிகைகள், உலகநாடுகளுக்கு இடையே தொலைக்காட்சி தொடர்பு (இன்டர்நெட்) மற்றும் வேதாகமத்திலிருந்து நாம் வாசிக்கும் நேரடியான போதனைகளைத் தவிர மற்றவகையாகப் பெற்றுக்கொள்ளும் உபதேசங்கள்.

4. நீங்கள் உதவிசெய்யும் தூர இடத்தில் ஊழியம்செய்யும் சுவிசேஷகர்கள் மற்றும் சுவிசேஷ வளர்ச்சிதிட்டங்கள்.

"அவர்களுடைய கனிகளினால் நீங்கள் அவர்களை அறிவீர்கள்" என்று இயேசு கூறும்போது, இப்பொருள்படவே சொல்லுகிறார். (மத்தேயு 7:16).

கடைசி நாட்களும் கிறிஸ்துவின் வருகையும்
(II பேதுரு 3:1-13)

முன்னுரை

அ. பேதுரு, கள்ளப்போதகர்களை யாவரும் அறியும்படி அதிகாரம் 2, வெளிப்படுத்திய பின், பரிசுத்தவான்களை உற்சாகப்படுத்தும்படியாகத் திரும்புகிறார். அவருடைய நிருபத்தின் நோக்கத்தை அவர்கள் நினைவுகூரும்படி செய்கிறார்.

1. கருத்துடன் முழுமையாக சிந்திக்கத் தூண்டுகிறார். (மற்றும் கிரியைசெய்ய).

2. பழைய ஏற்பாட்டு தீர்க்கத்தரிசிகளின் வார்த்தைகளை உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறார்.

3. ஆதி அப்போஸ்தலர்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டக் கற்பனைகளை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறார்.

ஆ. நாம் பார்ப்பதுபோல, இவை யாவும் சபையை ஆகாயத்தில் எடுத்துக்கொள்ள, கிறிஸ்து மறுபடியும் வருவதோடு தொடர்புடையது. இதுவே, ஒவ்வொரு விசுவாசியினுடைய ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையாக இருக்கிறது. ஆகவே, கள்ளப்போதகர்களால் இழுத்துச் செல்லப்பட்டு விசுவாசத்திலிருந்து விழுந்துபோய், அவர்களுக்காக வாக்குத்தத்தம்செய்யப்பட்ட பலனை இழந்துபோகாமல், ஜாக்கிரதையாக இருக்க அவருடைய வாசகர்களை பேதுரு உற்சாகப்படுத்துகிறார்.

1. கடைசி நாட்களில், கிறிஸ்துவின் வருகையைப்பற்றி பரியாசம் செய்வார்கள். (3:3-7)

அ. வசனம் 3-4. "கடைசி நாட்களில் பரியாசக்காரர்கள் வந்து..." "பரியாசக்காரர்" என்றால் கேலிசெய்பவர்கள். (நகைத்து, விகடம்பேசுபவர்கள்) மற்றொருவர் ஒரு காரியம் நடக்கப்போவதைக்குறித்து உறுதியுடன் கூறினது தொடர்பாக இகழ்ச்சியாக சுடுசொல் கூறுவார்கள். பேதுரு மறுபடியும் சபையிலுள்ள கள்ளப்போதகர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அவர்கள், பாவம்செய்பவர்களாகவும், கலகஞ் செய்பவர்களாகவும் இருந்தது மட்டும் அல்லாமல், பரியாசக்காரர்களாகவும் இருந்தார்கள்.

ஆ. கடைசிநாட்களில், தேவனுடைய வார்த்தையைப் பற்றிக்கொண்ட உண்மையானவர்களை, இந்தப் பரியாசக்காரர்கள், இகழ்ந்து சுடுசொல் கூறுவார்கள்.

அவர்களைப் பின்பற்றுகிறவர்களைக் காத்துக்கொள்ளவும், தங்களுடைய துன்மார்க்கத்தை நியாயப்படுத்திக்கொள்ளவும், தங்களுடைய பேராசையான காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளவும், அவர்கள் இதைச்செய்கிறார்கள். அவர்கள் கீழ்க்கண்டவாறு சொல்லுவார்கள்.

1. கிறிஸ்து "வருவார்" என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? இவ்வளவு நீண்டகாலம் எடுத்துக்கொள்ளும் ஒரு வாக்குத்தத்தம், ஒருபோதும் நிறைவேறாது.

2. ஒழுங்கு முறைப்படி செயல்பட்டுவரும் இப்பிரபஞ்சத்தில், நீங்கள், வரப்போவதாக முன் அறிவித்துள்ள பூமி அதிர்ச்சி போன்ற அதிசய சம்பவங்கள் பூமியில் உண்டாக சாத்தியமில்லை.

கடைசி நாட்களும் கிறிஸ்துவின் வருகையும் (II பேதுரு 3:1-13)

உதாரணமாக, பழைய ஏற்பாட்டுகாலத்து முற்பிதாக்கள் மரணத்திற்குப்பின்பும், (பரம்பரைத் தலைவர்கள்) சிருஷ்டிப்பின் ஆரம்ப காலத்திலிருந்து, இப்பிரபஞ்சத்திலுள்ள யாவும். எப்போதும்போல இருந்தவிதமாய் இருக்கிறதே என்று சொல்லுவார்கள். பாபிலோனியர்கள் வசமாய் யூதா விழுந்துபோவார்கள் என்று, ஏசாயா முன் அறிவித்தபோதும், பரியாசக்காரர்கள், இவ்விதமாகவே தர்க்கம் செய்து அவனை எதிர்த்து நின்றார்கள். (ஏசாயா 28:14-15).

இ. கள்ளத்தீர்க்கத்தரிசிகள், கீழ்க்கண்டவாறு பேசிவருகிறார்கள்.

1. இப்பிரபஞ்சத்தின் இயற்கையான மாறாத பிரமாணம்.

2. வானமண்டல சுடர்களின் அசைவுகளைக் குறித்து முன் அறிவிப்பது.

3. மானிடர்கள் மற்றும் ஜடப்பொருட்கள் ஆகியவைகள் தொடர்ந்து படிப்படியாக, இவ்வுலகமுழுவதிலும், உருமாற்றம் பெற்று வருகின்றன. (ஜடப்பொருட்கள் மேலும் முன்பு இருந்ததைவிட நன்றாக மாறிவருகிறது).

4. அவருடைய சபைக்காக கிறிஸ்து திரும்ப வருவதாக வாக்குத்தத்தம்செய்து, 2000 வருடங்கள் கடந்துவிட்டது. பேதுரு சொல்லப்போகும் செய்தியை அவர்களும் கேட்பார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்

ஈ. வசனம் 5-7 "மனதார அறியாதிருக்கிறார்கள்"

பேதுரு பரியாசக் காரர்களின் இரண்டாவது குறிப்பின்பேரில் பேசுகிறார். முதலாவது "பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே..." சிருஷ்டிப்பு மற்றும் ஜலப்பிரளய சம்பவங்களைத் திரும்ப எடுத்துக் கூறி, கள்ளப்போதகர்கள் அதிகாரத்துடன் போதிப்பவைகளைக் கண்டிக்கிறார். கள்ளப்போதகர்கள் அதிகாரத்துடன் சொல்வதுபோல், இப்பிரபஞ்சம் நித்தியமாக நிலைத்து நிற்கப்போவதில்லை என்பதை இச்சரித்திரங்கள் மூலமாக நிரூபிக்கிறார். தங்களுடைய நிலையையும், தங்களைப் பின்பற்றுகிறவர்களையும் காத்துக்கொள்ளுவதற்காக, கள்ளப்போதகர்கள், இக்காரியங்களைத் துணிகரமாக மறந்து விடுகின்றனர். பேதுரு கீழ்க்கண்ட காரியங்களைக் கூறுகிறார்:

1. வெகு காலத்திற்கு முன்னால், தேவனுடைய கட்டளையினாலே, வானங்களும், பூமியும் ஜலத்தினின்று தோன்றின. (ஆதியாகமம் 1:1-2, 6-10)

2. அந்த ஜலத்தினாலே, அந்தக் காலத்திலிருந்து உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிக்கப்பட்டது. (ஆதியாகமம் 6:17). இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்தவர், சன்மார்க்க தன்மையுள்ளவர், அவர் பாவம் தண்டிக்கப்படாமல் இருக்க அனுமதிக்கமாட்டார்.

(மத்தேயு 24:37-39) அவருடைய கட்டளையினால், எந்த மூலப்பொருளிலிருந்து அது (பூமி) தோன்றினதுவோ, அந்த மூலப்பொருளாலே (ஜலம்) அதுவும், அதில் இருந்த துன்மார்க்க மக்களும் அழிக்கப்பட பயன்படுத்தப்பட்டது!

3. அவ்வாறாகவே, கிறிஸ்து வரப்போகும் அந்த நேரத்தில், பாவத்தின் காரணமாக, தேவனுடைய கட்டளையினாலே, மறுபடியும் உலகம் முழுவதின் மேலும் அழிவு வரப் போகிறது.

கடைசி நாட்களும் கிறிஸ்துவின் வருகையும்
(II பேதுரு 3:1-13)

இந்த முறை, தண்ணீருக்குப் பதிலாக அக்கினியை தேவன் பயன்படுத்தப்போகிறார் என்பதே ஒரே வித்தியாசம். ஜலப்பிரளயத்தைப் பற்றி கூறும் பழைய ஏற்பாட்டு வேத வசனங்கள் வருங்காலத்து அக்கினியைப் பற்றியும் நமக்கு அறிவிக்கின்றன. (யோவேல் 2:30; ஏசாயா 66:15-16; மல்கியா 4:1)

உ. பவுலுடைய நாட்களிலிருந்த கள்ளப்போதகர்களுக்கு, அவ்வாறே நம்முடைய காலத்திலிருக்கும் பரியாசக்காரர்கள் மற்றும் கள்ளப்போதகர்களுக்கும், பவுலுடைய உபதேசங்களில் ஒரு சன்மார்க்க பாடம் இருக்கிறது. இந்த உலகத்தைப் படைத்தவர் சன்மார்க்கத் தன்மையுடைய தேவன். எனவே, அவருக்கு விரோதமாக எதிர்த்து நின்று, கிறிஸ்துவின் மூலமாக உள்ள அவருடைய இரட்சிப்பின் வழியைப் புறக்கணிப்பவர்கள், அவர்களுடைய சொந்த அபாயத்திற்கேதுவாகவே, அவ்வாறு துணிந்து செய்கிறார்கள்.

2. கடைசி நாட்களில், கிறிஸ்துவின் வருகைத் தாமதமாவது போல் காணப்படும் (3:8-9)

அ. கடைசி நாட்களில், பரியாசக்காரர்களின் முதல் முறையீட்டின் பேரில் பேச பேதுரு இப்பொழுது திரும்புகிறார். அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறுவார்கள்: "கிறிஸ்து வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? நிறைவேற இவ்வளவு நீண்ட காலம் எடுத்துக்கொள்ளும் ஒரு வாக்குத்தத்தம் ஒருபோதும் சம்பவிக்கப் போவதில்லை" (வசனம் 4)

ஆ. வசனம் 8. "கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்". சங்கீதங்களிலிருந்து, மேற்கோளாக வசனங்கள் எடுத்து, அவர்களுடைய அவிசுவாசத்திற்குப் பதிலளிக்கிறார்: "உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக் கழிந்த நாள் போலவும், இராச்சாமம் போலவும் இருக்கிறது. (யூதர்கள் இரவைப் பிரித்த மூன்று காலங்களில் ஒரு காலமாக இருக்கிறது) (சங்கீதம் 90:4) தேவன் நேரத்தை நாம் பார்ப்பது போல் நோக்குவது இல்லை.

நீண்ட காலம் என்று மனிதனால் கருதப்படுகிற காலம், தேவனுக்கு விரைவாகக் கடந்து செல்லும் நொடிப்பொழுதுபோல் இருக்கிறது.

இ. வசனம் 9. "கர்த்தர் தமது வாக்குத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல் ......" கர்த்தர் காலத்தை நோக்குவது போல், நாமும் நோக்குவோமானால், கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய அவருடைய வாக்குத்தத்தை நிறைவேற்றுவதில் அவர் உண்மையில் தாமதமாக இல்லை என்பதை நாம் ஒத்துக்கொள்ளுவோம். அந்த நாள் வரும். அவர் வாக்குப்பண்ணினபடியே கிறிஸ்து வருகிறார்!

ஈ. வசனம் 9. "ஒருவரும் கெட்டுக் போகாமல் இருக்க .... நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்". மானிடர்மீதுள்ள அன்பினிமித்தமாக, தேவன் நீடிய பொறுமையுடையவராயிருப்பதின் காரணமாக அவர் தாமதிக்கிறார். ஒருவராவது அக்கினியில் அழிந்துபோக, அவர் விரும்பவில்லை, ஒவ்வொருவரும் கிறிஸ்துவிடம் வந்து, அழிவிலி ருந்து இரட்சிக்கப்பட அவர் விரும்புகிறார்.

1. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை (கிறிஸ்துவை) அறிகிற அறிவை அடையவும்,

கடைசி நாட்களும் கிறிஸ்துவின் வருகையும்
(II பேதுரு 3:1-13)

அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்". (1தீமோத்தேயு 2:4)

2. "துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் (பொல்லாத) திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம், என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசேக்கியேல் 18:23) இது இந்த உபதேசங்களைக் கேட்கும் ஒவ்வொரு அவிசுவாசியையும், இந்தப் பட்டணத்தில், இந்த தேசத்தில் உள்ள ஒவ்வொரு அவிசுவாசியையும் உள் அடக்கும். தேவன் உன்னை நேசிக்கிறார்.

நீ கிறிஸ்துவினிடம் வந்து, அக்கினியினால் அழிக்கப்படுவதைத் தவிர்க்கவேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்!

3. பரிசுத்தமும் தேவபயமுமுள்ள வாழ்க்கை வாழ கிறிஸ்துவின் வருகை நம்மை உற்சாகப்படுத்தவேண்டும் (3:10-13)

அ. வசனம் 10. "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்" புதிய ஏற்பாட்டில், "கர்த்தருடைய நாள் திருடன் வருவது போல், வரும் என்று குறிப்பிடுவது இது முதல் முறை அல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு இவ்வாறு கூறுகிறார்: "இரவில் திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வரும்... " (1தெசலோனிக்கேயர் 5:2) அவிசுவாசிகளுக்கு இது குறிப்பிடப்படுகிறது. அவர் திரும்ப வருவதற்காக எதிர்நோக்கியிராதபடியினால்,

அது, அவர்களுக்கு இரவில் திருடன் வருகிறவிதமாய் வரும். மற்றும் அவர்கள், அவருடைய வருகையோடு சம்பந்தப்பட்ட கீழ்க்கண்ட அடையாளங்களுக்காக எதிர்பார்த்து இருக்கவில்லை.

1. எதிர்த்து கலகம் செய்வதற்கான ஆரம்பம்.

2. "கேட்டின் மகன்" வெளிப்படுவதற்கு

3. இந்த அக்கிரமக்காரன் வெளிப்படும் படியாகப் பரிசுத்த ஆவியானவர் விலகிச் செல்லுவார். (2தெசலோனிக்கேயர் 2:3-8)

ஆ. வசனம் 10,12 - கிறிஸ்துவின் வருகையின்போது, வானமும் பூமியும் அழிக்கப் படபோவதை மனிதர்களால் கிரகித்துக் கொள்வதற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. தேவன் தாமே இடற்பட்டு, வானங்களும் பூமியும், கீழ்க்கண்டவாறு அழிக்கப்படப்போவதை நடப்பிக்கப்போகிறார்.

1. வானங்கள் (பூமிக்கு மேலேயுள்ள ஆகாயம்) மட மட என்று அகன்றுபோம். (அக்கினியினால்) தன்னுடைய குறியைநோக்கி பாய்ந்துசெல்லும் அம்பின்தொனியை உடையதாயிருக்கும்திறந்த வெளியில், காட்டில் பற்றிய நெருப்பு சுவாலை காற்றினால் அடித்துச் செல்லப்படும்போது உண்டாக்கும் சத்தம்.

2. "பூதங்கள் வெந்து உருகிப்போம்" சூரியன், சந்திரன், மற்றும் நட்சத்திரங்கள் நெருப்பினால் அழிக்கப்படும் (உருகிவிடும்).

3. "பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" நம்முடைய உலகத்திலுள்ள ஜடப்பொருட்களின் மூலகங்கள், அக்கினியின் வெப்பத்தினால் அழிக்கப்பட்டு, முற்றிலும் உருகி ஒன்றுமில்லாமல் போய்விடும்.

கடைசி நாட்களும் கிறிஸ்துவின் வருகையும் (II பேதுரு 3:1-13)

இ. பேதுரு சொல்வதை, கிறிஸ்து மற்றும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கத்தரிசிகள் உறுதிப்படுத்துகிறார்கள்.

1. கிறிஸ்து: "...சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். வானமும் பூமியும்ஒழிந்துபோம்..." (மத்தேயு 24:29,35; மற்றும் ஏசாயா13:10).

2. ஏசாயா: "இதோ தம்முடைய கோபத்தை....அக்கினி சுவாலையாகவும் செலுத்தக் கர்த்தர் அக்கினியோடு வருவார். கர்த்தர் அக்கினியாலும், தமது பட்டயத்தாலும், மாம்சமான எல்லாரோடும் வழக்காடுவார்" (ஏசாயா66:15-16).

3. யோவேல்: "....அது சமீபமாயிருக்கிறது.....அது இருளும் அந்தகாரமுமான நாள். அது மப்பும் மந்தாரமுமான நாள்....வானத்திலும் பூமியிலும், இரத்தம், அக்கினி புகை ஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன்.... கர்த்தருடைய நாள் வருமுன்னே, சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும் (யோவேல் 2:1-2, 30-31)

4. மல்கியா: "இதோ, சூளையைப் போல் எரிகிற நாள் வரும்" (மல்கியா 4:1)ஈ. வசனம் 11. "இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்கவேண்டும்"

"பரிசுத்த நடக்கை" கிறிஸ்துவின் ஆளுகையின் கீழ் பொல்லாப்பையும் பாவத்தையும் விட்டுவிலகி இருக்க வேண்டும். "தேவ பக்தி" அவரை ஆராதிப்பதிலும், சேவிப்பதிலும் அர்ப்பணிக்கப் பட்டவர்களாயிருக்கவேண்டும். தற்போதுள்ள வானமும் பூமியும் அழிக்கப்படபோகிற செய்தி, விசுவாசிகளை அவர்களுடைய பெரிய தேவனும், இரட்சகருமான இயேசுகிறிஸ்துவின் வருகைக்காக அவர்கள் காத்திருக்கும்போது, பரிசுத்த வாழ்க்கையும், தேவபக்தியுள்ள ஜீவியமும் செய்ய வேண்டிய அவசியத்தைப்பற்றிய விழிப்புள்ளவர்களாயிருக்கச் செய்ய வேண்டும். "விழித்திருங்கள்" என்று இயேசு நமக்குச் சொல்லுகிறார். (மத்தேயு 25:13) "விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம்" என்று பவுல் நமக்குக் கூறுகிறார். (1தெசலோனிக்கேயர் 5:6) "நீங்கள் கறைபற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே (கிறிஸ்துவுடன்) காணப்பட ஜாக்கிரதையாயிருங்கள்" 2பேதுரு 3:14.

உ. வசனம் 13. "புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்". அவரை நேசித்து, அவருக்கு உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருப்பவர்களுக்கு புதிய வானத்தையும், புதிய பூமியையும் தேவன் கொடுக்கப் போகிறார். (வெளிப்படுத்தின விசேஷம் 21:1) அது, நீதிமான்களின் வீடாக இருக்கும். இதைத்தான் நாம் எதிர்நோக்கியிருக்கிறோம். ஆகவே கீழ்க்கண்டவற்றை நீங்கள் விசுவாசிக்கத் தக்கதாக எந்த ஒரு கள்ளப்போதகர்களும் உங்களை தந்திரமாக ஏமாற்றி விட அனுமதியாதேயுங்கள்.

1. கிறிஸ்து திரும்ப வரப்போவதில்லை.

2. தற்போதுள்ள இந்த பிரபஞ்சம் அழிக்கப்படமாட்டாது.

3. கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தவர்களாயிருந்து, அதே வேளையில் துன்மார்க்கமாகவும் வாழலாம்.

BELLWETHER INTERNATIONAL
GOOD NEWS PUBLISHERS

கடைசி நாட்களும் கிறிஸ்துவின் வருகையும்
(II பேதுரு 3:1-13)

முடிவுரை

அ. இந்தக் கடைசி நாட்களில் அநேகர் விசேஷமாகக் கள்ளப்போதகர்கள் (சத்தியத்தை விட்டு விலகினவர்கள்) இயேசுவின் வருகையைப்பற்றி பரியாசம் செய்வார்கள். அநேகர் அதை விசுவாசிப்பார்கள். ஏனெனில் கிறிஸ்துவின் வருகை தாமதமாவது போல் காணப்படுகிறது. ஆனால் தேவன் மனிதர்களைப்போல நேரத்தை நோக்குபவர் அல்ல, மற்றும், அவர் ஒருவராவது கெட்டுப் போவதை விரும்பாத, கிருபையுள்ளவராயிருக்கிறார். எல்லா மனிதர்களும் கிறிஸ்துவினிடம் வரவேண்டும் என்றும், அவர்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பவேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். எனவே கிறிஸ்துவின் வருகையை இன்னும் கொஞ்சக் காலத்திற்குத் தாமதிக்கச் செய்கிறார்.

ஆ. வானத்திலும், பூமியிலும் கிறிஸ்துவினுடைய வருகையில் அக்கினியால் அழிக்கப்படும் என்ற செய்தி, நாம் அவருடைய வருகைக்காகக் காத்திருக்கும்போது, பரிசுத்த வாழ்க்கை வாழவும், தேவபக்தியுள்ள ஜீவியம் செய்யவும், நம்மைத் தூண்ட வேண்டும். இது, அவிசுவாசிகள் மனந்திரும்புவதற்கும் தூண்டவேண்டும்.

அது மிகவும் பிந்தி விடுவதற்குமுன், அவர்கள் கிறிஸ்துவைக் கண்டுகொள்வதும், பாவமன்னிப்பைப்பெற்றுக் கொள்வதும் மிகவும் அவசியம்! ஏனெனில் கிறிஸ்து சீக்கிரம் வருகிறார்! இந்த உலகம் அழிக்கப்படும். தேவன் உண்டாக்கப்போகிற புதிய வானத்திலும், புதிய பூமியிலும், நீதிமான்கள் மட்டுமே வாழுவார்கள்.